ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ பொன்னிவர் மேனி ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பொன்னிவர் மேனி ॥

திருநாகை

‡பொன்னிவர் மேனி மரகதத்தின்⋆
பொங்கிளஞ்சோதி அகலத்தாரம்
மின்⋆ இவர் வாயில் நல் வேதம் ஓதும்⋆
வேதியர் வானவர் ஆவர் தோழீ⋆
என்னையும் நோக்கி என்னல்குலும் நோக்கி⋆
ஏந்திளங்கொங்கையும் நோக்குகின்றார்⋆
அன்னை என் நோக்கும் என்றஞ்சுகின்றேன்⋆
அச்சோ ஒருவர் அழகியவா! (1)

தோடவிழ் நீலம் மணம் கொடுக்கும்⋆
சூழ் புனல் சூழ் குடந்தைக் கிடந்த⋆
சேடர்கொல் என்று தெரிக்க மாட்டேன்⋆
செஞ்சுடர் ஆழியும் சங்கும் ஏந்தி⋆
பாடகமெல் அடியார் வணங்கப்⋆
பன் மணி முத்தொடிலங்கு சோதி⋆
ஆடகம் பூண்டொரு நான்கு தோளும்⋆
அச்சோ ஒருவர் அழகியவா! (2)

வேயிருஞ்சோலை விலங்கல் சூழ்ந்த⋆
மெய்ய மணாளர் இவ்வையம் எல்லாம்⋆
தாயின நாயகர் ஆவர் தோழி!⋆
தாமரைக் கண்கள் இருந்தவாறு⋆
சேயிருங்குன்றம் திகழ்ந்ததொப்பச்⋆
செவ்விய வாகி மலர்ந்த சோதி⋆
ஆயிரம் தோளொடிலங்கு பூணும்⋆
அச்சோ ஒருவர் அழகியவா! (3)

www.prapatti.com

வம்பவிழும் துழாய் மாலை தோள்மேல்⋆
 கையன ஆழியும் சங்கும் ஏந்தி⋆
நம்பர்நம் இல்லம் புகுந்து நின்றார்⋆
 நாகரிகர் பெரிதும் இளையர்⋆
செம் பவளம் இவர் வாயின் வண்ணம்⋆
 தேவர் இவரது உருவம் சொல்லில்⋆
அம்பவளத் திரளேயும் ஒப்பர்⋆
 அச்சோ ஒருவர் அழகியவா! (4)

கோழியும் கூடலும் கோயில் கொண்ட⋆
 கோவலரே ஒப்பர் குன்றம் அன்ன⋆
பாழியந் தோளும் ஓர் நான்குடையர்⋆
 பண்டிவர் தம்மையும் கண்டறியோம்⋆
வாழியரோ இவர் வண்ணம் எண்ணில்⋆
 மா கடல் போன்றுளர் கையில் வெய்ய⋆
ஆழியொன்றேந்தியோர் சங்கு பற்றி⋆
 அச்சோ ஒருவர் அழகியவா! (5)

வெஞ்சின வேழம் மருப் பொசித்த⋆
 வேந்தர்கொல் ஏந்திழையார் மனத்தைத்⋆
தஞ்சுடை ஆளர்கொல் யான் அறியேன்⋆
 தாமரைக் கண்கள் இருந்தவாறு⋆
கஞ்சனை அஞ்ச முன் கால் விசைத்த⋆
 காளையர் ஆவர் கண்டார் வணங்கும்⋆
அஞ்சன மா மலையேயும் ஒப்பர்⋆
 அச்சோ ஒருவர் அழகியவா! (6)

பிணியவிழ் தாமரை மொட்டலர்த்தும்⋆
 பேர் அருளாளர் கொல் யான் அறியேன்⋆
பணியும் என் நெஞ்சம் இதென்கொல் தோழி!⋆
 பண்டிவர் தம்மையும் கண்டறியோம்⋆
அணிகெழு தாமரை அன்ன கண்ணும்⋆
 அங்கையும் பங்கயம் மேனி வானத்து⋆



www.prapatti.com

அணிகெழு மா முகிலேயும் ஒப்பர்⋆
    அச்சோ ஒருவர் அழகியவா! (7)

மஞ்சுயர் மா மதி தீண்ட நீண்ட⋆
    மாலிருஞ்சோலை மணாளர் வந்து⋆ என்
நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் நின்று நீங்கார்⋆
    நீர்மலையார்கொல் நினைக்கமாட்டேன்⋆
மஞ்சுயர் பொன்மலை மேல் எழுந்த⋆
    மா முகில் போன்றுளர் வந்து காணீர்⋆
அஞ்சிறைப் புள்ளும் ஒன்றேறி வந்தார்⋆
    அச்சோ ஒருவர் அழகியவா! (8)

எண்திசையும் எறி நீர்க் கடலும்⋆
    ஏழ் உலகும் உடனே விழுங்கி⋆
மண்டி ஓர் ஆலிலைப் பள்ளி கொள்ளும்⋆
    மாயர்கொல் மாயம் அறியமாட்டேன்⋆
கொண்டல் நன் மால்வரையேயும் ஒப்பர்⋆
    கொங்கலர் தாமரைக் கண்ணும் வாயும்⋆
அண்டத்தமரர் பணிய நின்றார்⋆
    அச்சோ ஒருவர் அழகியவா! (9)

‡அன்னமும் கேழலும் மீனும் ஆய⋆
    ஆதியை நாகை அழகியாரை⋆
கன்னி நன் மா மதிள் மங்கை வேந்தன்⋆
    காமரு சீர்க் கலிகன்றி⋆ குன்றா
இன்னிசையால் சொன்ன செஞ்சொல் மாலை⋆
    ஏழும் இரண்டும் ஓர் ஒன்றும் வல்லார்⋆
மன்னவராய் உலகாண்டு⋆ மீண்டும்
    வானவராய் மகிழ்வெய்துவரே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com